புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • அக்டோபர், 30 2025 • புரட்சி 25 • முழக்கம் 43 • விலை ரூ.6.00

## மத உரிமையில் அரசு தலையிட முடியாது - உச்சநீதிமன்றம்

மதமாற்றத் தடைச் சட்டங்களுக்கு எதிராக உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. எந்த மதத்தில் இருப்பது என்பது தனி மனித உரிமை. அதில் அரசு தலையிட உரிமை இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது. உ.பி உள்ளிட்ட பல மாநிலங்களில் மதமாற்றத் தடைச் சட்டங்களை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளில் நீதிபதி ஜே.பட்டிவாலா மற்றும் மனோஜ் மிஸ்ரா அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அரசியல் சட்டத்தின் 25வது பிரிவு தனி மனித சுதந்திரத்தை அடிப்படை உரிமையாகவே வெளிப்படுத்துகிறது என்று கூறிய நீதிபதிகள், மனசாட்சி உரிமை என்பது தனி மனிதரின் சிந்தனை உரிமை என்றும் தீர்ப்பில் கூறியுள்ளார்கள்.

அதேபோல் திருமணத்தில் துணைவரைத் தேர்வு செய்யும் உரிமையும் தனி மனித உரிமை என்றும், யாரைத் திருமணம் செய்து கொள்வது என்பதில் தலையிடும் உரிமை எவருக்கும் இல்லை என்றும், அது தனி நபர் உரிமையைச் சார்ந்தது என்றும் தீர்ப்பளித்துள்ளது. திருமணம் வேண்டுமா? வேண்டாமா? என்பது குறித்தும் யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது குறித்தும் தனி மனித உரிமையின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது.

## கழுதைகளை காணோம்

மனித குல வரலாற்றில் பொதி சுமந்து தொண்டாற்றிய கழுதை இனம் மறைந்து வருகிறது. நாடு முழுதும் 70 விழுக்காட்டிற்கு மேற்பட்ட கழுதைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டன என்றும், மத்திய பிரதேச மாநிலத்தில் 94 விழுக்காடு கழுதைகள் காணவில்லை என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

ம.பியில் 7 மாவட்டங்களில் ஒரு கழுதை கூட இல்லை. சீனாவில் முகப்பொலிவுக்கும், உடல் தோலுக்கும் கிரீம் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு கழுதைகள் கொல்லப்பட்டு ஏற்றுமதியாவதும் காரணம் என்று கூறப்படுகிறது. பசுமாட்டுக்குத் தான் இந்த நாட்டில் மதம் கண்ணீர் வடிக்கும். கழுதை பற்றி கவலைப்படாதது காரணம் பசு 'பிராமணர்' பிரிவிலும் கழுதை 'சூத்திர' பிரிவிலும் வைக்கப்பட்டுள்ளது.

## ஆக்கிரமிப்பு கோயில்கள்; விளக்கம் கேட்கிறது உயர்நீதிமன்றம்

பொது இடங்களிலும், சாலைகளிலும் (சட்ட) அனுமதி பெறாமல், கோவில்கள், சர்ச்சுகள், மசூதிகள் அதேபோன்று மத நிறுவனங்களால் கட்டப்பட்ட அமைப்புகள் எவையும் இல்லை என்பதை உறுதி செய்து தகவல் தெரிவிக்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தாமாகவே முன்வந்து அரசிடம் விளக்கம் கேட்டு இருக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் சிறீவத்சவா, ஜஸ்டிஸ் ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அந்த அமர்வு இப்படி ஒரு முக்கிய வழக்கைத் தாங்களே பதிவு செய்துள்ளது.

31.1.2018 அன்று தந்த ஒரு நீதிமன்றத் தீர்ப்பில், ஆக்கிரமிப்பு கோயில்கள் அகற்றிடவேண்டும் என்று தீர்ப்பு தந்தும், ஆக்கிரமிப்புக் கோவில்கள் அமைப்புகள் மீது எந்த சட்ட நடவடிக்கையும் பாயாமல், மறைமுகமாக அதனை ஊக்குவிக்கும் வகையில், காவல்துறையும், அரசும் கண்டும் காணாததுபோல அலட்சியப்படுத்தி வருவதைத் தொடர்ந்து உயர்நீதிமன்றம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

## கண்களை பறித்த தீபாவளி

ம.பி மாநிலத்தில் தீபாவளிக்காக கார்பைடு துப்பாக்கி பட்டாசு கடைகளில் விற்பனையானது. கடும் ஆபத்துகளை உருவாக்கும் ரசாயனம் கலந்த இந்த துப்பாக்கி தடை ஏதும் இல்லாமல் கடைகளில் விற்கப்பட்டன. இந்த துப்பாக்கியை வெடித்த 23 பேர் மோசமாக கண்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலும் குழந்தைகள்.

தோட்டங்களில் குரங்குகளை விரட்டுவதற்கு பயன்படுத்தும் ரசாயனம் இந்த துப்பாக்கியில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சமூக ஊடகங்கள் இந்த துப்பாக்கியின் சிறப்பை விளம்பரம் செய்து விற்பனைகளை தூண்டிவிட்டன. சிகிச்சை பெறும் சிலர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும், பார்வை இழக்கும் நிலையில் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

**அரசியல் சட்டத்திக்கு எதிரான "பழக்க வழக்கங்களை" ஏற்க முடியாது.**

# கேரள உயர்நீதிமன்றத்தின் அதிரடி தீர்ப்பு

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் பிரச்சனையில் கேரள உயர்நீதிமன்றம் புரட்சிகர தீர்ப்பு ஒன்றை அளித்துள்ளது. "பழக்க வழக்கங்கள்" என்ற சட்டத்தின் பிரிவை கண்மூடித்தனமாக ஏற்க முடியாது என்று நீதிமன்றம் கூறியுள்ளது. 'பழக்க வழக்கம்' அரசியல் சட்டத்தின் நோக்கத்திற்கு உட்பட்டது என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

"அர்ச்சகர்கள் குறிப்பிட்ட ஜாதி அல்லது பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற கட்டாய மத நடைமுறை எதுவும் இல்லை" என்றும் கேரள உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

"தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் செய்வது அரசியலமைப்பு கூறும் சமத்துவத்தை உறுதி செய்யும். ஜாதிக்கும் பாரம்பரியத்திற்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது" என்றும் கூறியிருக்கும் நீதிபதிகள், இதுதொடர்பான விவகாரத்தில், அகில கேரள தந்திரி சமாஜம் (AKTS) என்ற பார்ப்பனர்கள் அமைப்பு தாக்கல் செய்த ரிட் மனுவையும் அதிரடியாகத் தள்ளுபடி செய்துள்ளது 2023-24ஆம் ஆண்டில் (அர்ச்சகர்கள்) நியமன நடவடிக்கைகளை கேரள தேவசம் பணிநியமன வாரியம் (KDRB) மேற்கொண்டது. அப்போது உரிய பயிற்சிப் பெற்றவர்கள் எஸ்.எஸ்.எல்சி கல்வித் தகுதியுடையுடன் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்திருக்கிறது.

'பிராமணர்கள்' மட்டுமே படிக்கும் வேத குருகுல பாட சாலையில் வேதம் படித்தவர்களையே நியமிக்க வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தார்கள். மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் கே.ஆர். ராஜ்குமார் உள்ளிட்டோர் ஆஜராகினர். "கேரளத்தில் உள்ள சுமார் 300 பாரம்பரிய தந்திரி குடும்பங்களை உள்ளடக்கிய பதிவுசெய்யப்பட்ட சங்கமான அகில கேரள தந்திரி சமாஜமான தாங்கள் தான், தலைமுறை தலைமுறையாக அர்ச்சகர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். எங்களை ஆலோசிக்காமல் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய 'தந்திர வித்யா' பயிற்சி நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டனர்.

திருவிதாங்கூர் தேவசம் வாரியத்தின் சார்பில் வழக்கறிஞர் ஜி. பிஜு, கேரள தேவசம் ஆட்சேர்ப்பு வாரியத்தின் சார்பில் வி.வி. நந்த கோபால் உள்ளிட்டோர் ஆஜராகினர். அவர்கள், "அர்ச்சகர் பணியில், ஒதுக்கப்பட்ட சமூகங்களிலிருந்து போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்பதையும், அவர்களை அர்ச்சகர் பணிக்கு தயார்ப்படுத்துவதற்கான பாடத்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த அமைப்பு இல்லாததை கவனத்தில் கொண்டே இந்த பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது என்று வாதிட்டனர்.

இந்த வாதங்கள் அனைத்தையும் கேட்ட நீதிபதிகள், "அர்ச்சகர்கள் நியமனத்திற்குத் தகுதிபெற ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட ஜாதி அல்லது பரம்பரையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதை, ஒரு அத்தியாவசிய மத நடைமுறை, சடங்கு அல்லது வழிபாட்டு முறையை வலியுறுத்துவதாகக் கருத முடியாது.

அரசியலமைப்பிற்கு முந்தைய காலத்திலிருந்தே எந்தவொரு வழக்கமோ அல்லது பழக்கவழக்கமோ இருந்தாலும், அது மனித உரிமைகள், கண்ணியம் அல்லது சமூக சமத்துவத்தின் அரசியலமைப்புக் கொள்கைகளை மீறுவதாகக் கண்டறியப்பட்டால், அதனை அங்கீகரிக்க முடியாது. அடக்குமுறையான, தீங்கு விளைவிக்கும், பொதுக் கொள்கைக்கு முரணான அல்லது நாட்டின் சட்டத்தை இழிவுபடுத்தும் எந்தவொரு வழக்கமோ அல்லது நடைமுறையோ, அரசியலமைப்புச் சட்டத்தின் அங்கீகாரத்தைப் பெற முடியாது.

எங்களைப் பொறுத்தவரை, கோயிலில் அர்ச்சகர்களாக நியமனம் செய்ய தகுதினவர்கள் என சான்றளிக்கும் 'தந்திர வித்யாலயா' என்ற பயிற்சி முறை ஒரு முழுமையான செயல்முறையாகவே தோன்றுகிறது. பாடத்திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்கள், கோயில் கடமைகளை மேற்கொள்வதற்கான அவர்களின் தயார்நிலையைக் குறிக்கும் வகையில், தீட்சை விழாக்களுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்.

மேலும், அத்தகைய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் கூட, இறுதித் தேர்வு மற்றும் முறையாக அமைக்கப்பட்ட குழுவால் தகுதயின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றனர். இதில் கற்றறிந்த அறிஞர்களைத் தவிர, ஒரு புகழ்பெற்ற தந்திரி குழுவும் அடங்கும். இந்தப் பின்னணியில், பாரம்பரிய அர்ச்சர்களின் கீழ் பயிற்சி பெற்ற நபர்களை மட்டுமே சாந்திகளாக நியமிக்க வேண்டும் என்ற மனுதாரர்களின் வாதத்தை நீதிமன்றம் நிராகரிக்கிறது என்று தீர்ப்பளித்தனர்.

# ஜாதி எதிர்ப்பைப் பேசும் 'பைசன்'



"மாரி செல்வராஜின் படைப்பாக்கத்தில் ஐந்தாவது திரைப்படமாக 'பைசன்' வந்திருக்கிறது .திரை அரங்கில் இந்தப் படத்தைப் பார்த்த போது படம் முழுதும் பார்வையாளர்களிடம் அப்படி ஒரு அமைதி.படம் முடிந்து வெளியேறும் போதும் கனத்த இதயத்துடன் எந்தப் பேச்சும் இல்லாமல் வெளியேறியதை பார்க்க முடிந்தது. பார்வையாளர்களிடம் மிகப்பெரிய தாக்கத்தை படம் உருவாக்கி இருக்கிறது என்பதை உணர்த்தியது.

1990-களின் முற்பகுதியில் நெல்லை மாவட்டம் ஜாதிக் கலவரங்களில் மூழ்கிக் கிடந்த நேரத்தில், ஜாதி வலிகளை சுமந்து ஒரு இளைஞன் தான் நேசித்த கபடியில் சர்வதேச அளவில் தடம் பதித்த வெற்றிக்கதையை ஜாதி எதிர்ப்போடு படம் பேசுகிறது.

கதையின் நாயகர் நாயகிகளை, உணர்வுகளின் வடிவமாக்கி, தனது நுட்பமான திரை மொழியில் எமோஷன்களாக மக்களிடம் கடத்தும் இயக்குனர், இந்த உணர்வுகளோடு ஜாதி எதிர்ப்பையும் குழைத்துத் தந்திருக்கிறார்.

படத்தின் மய்யம் கபடியாக இருப்பதால் அது இளைஞர்களை ஈர்க்கிறது. கபடியோடு ஜாதித் தடைகளும், கொடுமைகளும் இணையும் போது புரிதலற்ற, இளைஞர்களை சிந்திக்கத் தூண்டுகிறது.

ஜாதி ஆதிக்கத்தை எதிர்க்கும் போது, ஜாதி குடும்பப் பெருமைகளை பேசுவது ஆபத்தானது என்று இயக்குனர் மிகச் சரியான ஜாதி எதிர்ப்புப் பார்வையை முன்வைக்கிறார்.

திருமண உறவில் ஆண்களை விட பெண்களின் வயது குறைவாக இருக்க வேண்டும் என்ற சமூகத்தடையையும், பாகிஸ்தான் வீரர்களோடு விளையாடும் போது மட்டும் விளையாட்டை விட மதவெறி துருத்திக் கொண்டிருப்பதையும் இயக்குனர் அம்பலப்படுத்தியிருக்கிறார்.

படத்தின் காட்சிப்படுத்தலும், ஜாதிகளை சுமந்து வாழும் மக்களின் வலிகளும், கூர்மையான வசனங்களும், பாடல்களும் உணர்வுகளை உலுக்குகின்றன

"ஜாதிப் படங்களையே ஏன் எடுக்கிறீர்கள்?" என்று செய்தியாளர் ஒருவர் கேட்டபோது மாரி செல்வராஜ் இவ்வாறு பதிலளித்தார்,"நான் ஜாதி வலிகளைக் கடந்து வந்தவன்; ஜாதி எதிர்ப்பு என்பது தான் எனக்கான அடையாளம்; ஜாதி எதிர்ப்பு படைப்புகளைத்தான் தயாரிப்பேன்" என்று நெஞ்சு நிமிர்த்தி பதிலடி தந்திருக்கிறார்.

**சல்யூட் தோழர்!!!**

**- விடுதலை இராசேந்திரன்,**
**முகநூல் பதிவு,**
***25.10.25***

## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் சரியா? (2)

# ஜீவா வரலாறுகளின் குழப்பங்கள்

- கொளத்தூர் மணி

**ஜீவாவின் 'ஈரோட்டுப் பாதை சரியா?' என்பதை பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கு முன்னர் சில செய்திகளை முன்னோட்டமாக முன்வைக்கிறோம்.**

தோழர் ஜீவா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை பலர் எழுதியிருந்தாலும், தோழர் எம். இஸ்மத் பாஷா எழுதிய **'ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு'** மட்டுமே ஜீவா வாழ்ந்த காலத்தில் (1946 மார்ச்) வெளிவந்த நூலாகும். அந்நூலுக்கு முகவுரை எழுதியுள்ள தோழர் ஏ.எஸ்.கே (அய்யங்கார்) அம்முகவுரையில் "நான் கண்டிப்பாக முகவுரை எழுத வேண்டும் என்று ஜீவாவே கூறினார். என் நண்பரின் கட்டளைக்குப் பணிகிறேன்" என்று குறிப்பிட்டே முகவுரை எழுதியுள்ளார். எனவே அந்த நூல் ஜீவாவின் பார்வைக்கும் ஏற்புக்கும் பின்னர் தான் வெளிவந்திருக்க வேண்டும்.

அந்நூலின் 12ஆம் பக்கத்தில் "கொள்கைக்காக வீட்டை விட்டு ஜீவா நேராக சுசீந்திரம் என்ற ஊருக்குச் சென்றார். அங்கு **தெருப்பிரவேச சத்தியாகிரகம்** ஆரம்பிக்கும் தருவாயில் இருந்தது. தெருக்களில் அரிஜனங்கள் செல்லக்கூடாது என்ற சமூக அநீதி அங்கு பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது; உலகப் பிரசித்திப் பெற்ற வைக்கம் சத்தியாக்கிரகத்தின் எதிரொலியாக சுசீந்திரத்திலும் சத்தியாக்கிரகம் செய்ய ஏற்பாடு ஆயிற்று. ஜீவா அந்தப் போராட்டத்தில் குதித்தார். சத்தியாக்கிரகிகளின் முதல் கோஷ்டியின் தலைவரானார். வைதீக ஜாதி இந்துக்கள் ஏவிவிட்ட குடி வெறியர்களின் மூங்கில்கழி அடிகளையும், வெற்றிலையை அதக்கி உமிழ்ந்த உமிழ்தல்களையும், வசை மாரிகளையும் பொறுத்து சாத்வீக சத்தியாகிரக பயிற்சியில் தேறினார். 'வழி விடுவீர்' என்று அவரால் ஆக்கப்பட்டு சத்தியாகிரக தொண்டர்களால் பாடப்பட்ட பாட்டு வீடுகளிலெல்லாம் எதிரொலித்தது.

அதே நூலின் 13-ஆம் பக்கத்தில் மற்றொரு செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. "பிரபல தேச பக்தரான ஸ்ரி வ.வே.சு. ஐயர் அவர்களால் சேரன்மாதேவியில் அப்போது ஒரு ஆசிரமம் நடத்தப்பட்டு வந்தது. 'பரத்வாஜர் ஆசிரமம்' என்று அதற்குப் பெயர். பிராமண மாணவர்களுக்கு மட்டும் ஒரு தனி இடத்தில் உணவு பரிமாறும் வழக்கம் அங்கு இருந்தது. இது கூடாது எல்லோருக்கும் ஒரே இடத்தில் உணவு பரிமாறப்பட வேண்டும் என்று ஈ.வெ.ரா., வரதராஜ நாயுடு முதலியோர் கிளர்ச்சி செய்தனர். **ஜீவா இந்தக் கிளர்ச்சியிலும் கலந்து கொண்டார்.** சிறந்த தேசியவாதிகளையும் இக்கொடிய ஜாதி மதப்பேய் விடவில்லையே என்று நினைத்து மிகவும் வருந்தினார். இக்கொடுமையை ஒழிக்க கடுமையாகப் போராட வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார்".

"நண்பர்கள் சிலருடன் செட்டிநாட்டுக்குச் சென்றார் காரைக்குடிக்கு அருகே உள்ள சிரா வயல் என்ற கிராமத்தில் தானே ஒரு **ஆசிரமத்தைத் தோற்றுவித்தார்**. 'காந்தி ஆசிரமம்' என்று இதற்குப் பெயர். ஸ்ரீ கும்பலிங்கம் என்பவரைத் தலைவராகக் கொண்ட இவ்வாசிரம நிர்வாகக் கமிட்டியில் பொதுக் காரியதரிசியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்" என்பவையே அவ்வரிகள்.

மற்றொரு வாழ்க்கை வரலாற்று நூல் 'ஜீவா வாழ்க்கை வரலாறு' ஆகும். அது நியூ செஞ்சுரி புத்தக நிலையத்தின் சார்பாக முதல் பதிப்பு ஜனவரி 1966இலும், இரண்டாம் பதிப்பு மார்ச் 1975இலும் வெளிவந்த ஒன்றாகும். அதை எழுதிய தோழர் கே. பாலதண்டாயுதம், ஜீவா அவர்களோடு இணைந்து பணியாற்றியவர்; ஜீவாவின் மரணத்துக்கு முதல் நாள் ஜனசக்தி அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும்போது "தோழர், நாளைக்கு எனக்கு ஓய்வு; பத்திரிக்கையைப் பார்த்துக் கொள்ளுங்கள், பாலன்" என்று சொல்லிவிட்டு சென்ற செய்தியைக் கூட அந்நூலில் பதிவு செய்துள்ளார். அவர்தான் ஜீவா சிலை அமைப்புக் குழுவின் செயலாளராக இருந்தவரும் கூட. அவருடைய நூலில் உள்ள பதிவுகள் ஜீவாவுடன் பழகிய காலத்தில் ஜீவாவிடம் இருந்து நேரடியாக பெற்ற செய்திகளின் தொகுப்பாகவே இருக்க வேண்டும். அந்நூலில் கீழ்க்கண்ட செய்திகள் காணப்படுகின்றன.

அந்நூலின் 25 ஆம் பக்கம் "கொள்கையை விட முடியாது; வீட்டை விடுகிறேன் என்று கூறி ஜீவா வீட்டை விட்டு வெளியேறினார். வைதீகக் கோட்டையான **வைக்கம் என்ற ஊரில் தீண்டாமை ஒழிப்பு சத்தியாக்கிரகம் தொடங்கிற்று.** பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டு ஜீவா அதில் தொண்டராகப் போய்ச் சேர்ந்து சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்; அடிபட்டார்; வேறு பல அடக்குமுறைகளுக்கும் ஆளானார். அங்கிருந்து திரும்பிய ஜீவா நாகர்கோவிலுக்கு 5 மைல் தூரத்தில் உள்ள சுசீந்திரத்திலும் அத்தகைய போராட்டத்தில் கலந்து கொண்டார்.

**சுசீந்திரம் தாணுமாலையன் சந்நதியில் ஜோசப் பூதலிங்கம்** என்ற தாழ்த்தப்பட்ட தோழரையும் வேறு பலரையும் அழைத்துக் கொண்டு **பிரவேசித்தார்.** வைதீக இந்துக்கள் இவர்கள் மீது காறி உமிழ்ந்தார்கள்; குடி வெறியர்களைக் கொண்டு கம்பால் தாக்கினார்கள். ஆனால் ஜீவா அவற்றைப் பொருட்படுத்தாமல் 'வழி விடுவீர்' என்று தான் இயற்றியப் பாடலை பாடிக் கொண்டே தடையை மீறி நுழைந்தார்". அந்தப் போராட்டத்தைத் தான் தோழர் இஸ்மத் பாஷா தான் எழுதிய ஜீவானந்தம் வாழ்க்கை வரலாற்றில் தெருப்பிரவேச சத்தியாகிரகம் என்று குறிப்பிடுகிறார்.

வைக்கத்தில் வெற்றி பெற்ற தெருக்களில் அனைவரும் நடக்கும் உரிமைப் போராட்டத்தின் தாக்கம், சுசீந்திரத்திலும் அதே திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஆளுகை பகுதியில் இருந்த சுசீந்திரத்தில் இருக்கிற தாணுமாலயன் ஆலயத்தைச் சுற்றி இருக்கிற தெருக்களிலும் சில சமுதாயத்து மக்கள் நடப்பதற்கு இருந்த தடையை எதிர்த்து 1926 ஜனவரி 29-ம் நாளில் சுசீந்தரம் போராட்டம் தொடங்கி இருக்கிறது. ஆனால் கே.பாலதண்டாயுதம் எழுதியுள்ள ஜீவா வாழ்க்கை வரலாறு என்னும் நூலின் 25-ஆம் பக்கத்தில் சுசீந்திரம் தாணுமாலயன் சந்நதியில் ஜோசப் பூதலிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட தோழரையும் வேறு பலரையும் அழைத்துக் கொண்டு பிரவேசித்தார் என்று போராட்டத்தை **ஆலய நுழைவுப் போராட்டமாக** பதிவு செய்திருக்கிறார்.

நாம் எழுப்புகிற கேள்வி **சுசீந்திரத்தில் நடந்தது தெரு பிரவேசப் போராட்டமா? ஆலய நுழைவுப் போராட்டமா?** என்பதுதான்.

**இந்த இடத்தில் கட்டுரையை படிப்பவர்கள் புரிதலுக்காக சில வரலாற்றுப் பதிவுகளை முன் வைக்க விரும்புகிறோம்.**

வைக்கம் போராட்டம் 30.3.1924 இல் தொடங்கிற்று 27.11.1925 அன்று பெரியார் தலைமையில் வைக்கத்தில் நடந்த வெற்றி விழா பொதுக்கூட்டத்தோடு நிறைவு பெற்றது.

சுசீந்திரம் போராட்டம் 29.1.1926 இல் தொடங்கியது, 4.9.1927 நாளிட்ட குடிஅரசு இதழில் அரசினர் உறுதியளித்தபடி வீதிகளை திறந்து விடாமல் இருக்கின்றார்கள் என்பதோடு அரசுக்கு ஒரு மாத அவகாசம் கொடுத்து மீண்டும் சத்தியாகிரகத்தை தொடங்க வேண்டும் என்று பெரியார் எழுதியுள்ளார்.

சேரன்மாதேவி போராட்டம் 1924-ம் ஆண்டின் இறுதியில் தொடங்கி அந்த ஆசிரமத்தை பொறுப்பேற்று நடத்தி வந்த வ.வே.சு அய்யர் 4.06.1925 அன்று பாபநாசத்தில் நீர்ச்சுழலில் சிக்கி இறந்ததும் முடிவுக்கு வந்தது.

குடிஅரசு 25.4.1926 நாளிட்ட இதழின் 11-ம் பக்கத்தில், சிராவயல் காந்தி ஆசிரமத் தலைவர் கும்பலிங்கம் விடுத்துள்ள அறிக்கையின்படி குரோதன வருஷம் தை மாதம் 29ஆம் தேதி 12.2.1926 அன்று தொடங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

இஸ்மத் பாஷா எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல் 14-ஆம் பக்கத்தில் வீட்டை விட்டு வெளியேறி 29.1.1926 இல் தொடங்கும் சுசீந்திரம் போராட்டத்தின் முதல் கோஷ்டியின் தலைவராக பொறுப்பேற்றார் என்கிறார். (21.8.1907)-ல் பிறந்த ஜீவாவுக்கு அப்போது வயது 18 ஆண்டுகள் 5 மாதம் தான்).

அடுத்து 15-ம் பக்கத்தில் சேரன் மாதவி குருகுலப் போராட்டத்தில் கலந்து கொண்டதாக உள்ளது. ஆனால் அந்தப் போராட்டமும் 4.6.1925 அன்று முடிவுக்கு வந்திருந்தது. அந்தப் போராட்டம் ஆர்ப்பாட்டமாகவோ, மறியலாகவோ, சத்தியாகிரகமாகவோ நடந்தது அல்ல!. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரான வரதராஜுலு நாயுடும், பொதுச்செயலாளராக இருந்த பெரியாரும் ஜாதி பேதம் காட்டுகிற சேரன்மாதேவி குருகுலத்திற்கு நன்கொடை அளிக்காதீர்கள் என்று 1924 ஆம் ஆண்டு இறுதியில் வெளியிட்ட அறிக்கையில் தொடங்கியது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டங்கள்; காந்தியாரின் சமாதான பேச்சு போன்ற செயல்பாடுகள்தான் சேரன்மாதேவி குருகுல போராட்டம் என்று சொல்லால் குறிக்கப்படுகிறதே தவிர, அந்தப் போராட்டம் ஆர்ப்பாட்டமாகவோ, சத்தியாகிரமாகவோ, மறியலாகவோ நடக்கவில்லை. அவ்வாறானால் இரண்டு நூலாசிரியர்களும் எழுதியிருப்பதைப் போல ஜீவா எந்த அடிப்படையில் சேரன்மாதவி போராட்டத்தில் பங்கேற்று இருப்பார் என்பதே கேள்விக்குரியதுதான். பதில் உண்மைக்கு புறம்பானது என்று மட்டும் தான் வரலாற்று தகவல்களில் இருந்து நாம்மால் அறிய முடிகிறது. எனவே இஸ்மத் பாஷாவின் ஜீவானந்தம் வாழ்க்கை வரலாற்று நூலின் 15-ம் பக்கத்தில் சேரன்மாதேவி குருகுலத்தில் இருந்து வெளியேறிய ஜீவா சிராவயல் என்ற கிராமத்தில் ஒரு ஆசிரமத்தை தோற்றுவித்தார் என்று குறிப்பிட்டு இருப்பதும் சரியல்ல. அந்த போராட்டம் 4.6.1925ஆண்டிலேயே முடிவுக்கு வந்துவிட்டது. சுசீந்தரம் போராட்டத்தை அடுத்து சிராவயல் சென்றார் என்பதாகவே இருக்க முடியும்.

**29.1.1926 சுசீந்திரம் சத்தியாகிரக போராட்டத்தின் முதல் கோஷ்டிக்கு தலைமை தாங்கிய ஜீவா 300 கி.மீ அப்பால் உள்ள சிராவயல் சென்று 12 நாட்களுக்குள் ஆசிரமத்தை கட்டித் தொடங்கினார் என்பது உண்மையாக இருக்க முடியுமா?.. அவர் ஜீவாவா? இல்லை ஜீபூம்பாவா என்ற குழப்பம்தான் மிஞ்சும்.**

இறுதி நாட்களில் ஜீவாவோடு பணியாற்றிய கே.பாலதண்டாயுதம் எழுதிய ஜீவா வாழ்க்கை வரலாறு என்ற நூலில் 27-ஆம் பக்கத்தில் 'ஆசிரமத்தில் அமர்ந்தார்' என்ற தலைப்பின் கீழ், ஜாதி பேதம் காட்டுகிற தமிழ் குருகுலம் அல்லது பரத்வாஜ் ஆசிரமம் என்ற ஸ்தாபனம் சேரன்மாதேவியில் மூடு விழா கண்ட பிறகு புதிய சமத்துவ ஆசிரமம் ஒன்றினை அமைக்கும் பணியில் ஜீவா ஈடுபட்டார் என்பதும் உண்மையாக இருக்க முடியாது.

நண்பர்கள் சிலருடன் செட்டிநாட்டுக்குச் சென்றார். காரைக்குடிக்கு அருகில் உள்ள சிராவயல் என்ற கிராமத்தில் காந்தி ஆசிரமம் என்ற பெயருடன் தானே ஒரு ஆசிரமத்தை தோற்றுவித்தார் என்று காணப்படுகிறது. 29.1.1926 சுசீந்திரம் சத்தியாகிரக போராட்டத்தின் முதல் கோஷ்டிக்கு தலைமை தாங்கிய ஜீவா 300 கி.மீ அப்பால் உள்ள சிராவயல் சென்று 12 நாட்களுக்குள் ஆசிரமத்தை கட்டித் தொடங்கினார் என்பது உண்மையாக இருக்க முடியுமா?.. அவர் ஜீவாவா? இல்லை ஜீபூம்பாவா என்ற குழப்பம்தான் மிஞ்சும்.

**அடுத்த கேள்வி:** இஸ்மத் பாஷா அவர்களின் நூலின் 12 ஆம் பக்கத்தில் " கொள்கைக்காக வீட்டை விட்டு" ஜீவா நேராக சுசீந்திரம் என்ற ஊருக்கு சென்று தெருப்பிரவேச சக்தியாகரத்தில் ஈடுபட்டார் என்று கூறுகிறது. ஆனால் கே.பாலதண்டாயுதம் எழுதிய வாழ்க்கை வரலாற்றின் 25-ம் பக்கத்தில் "கொள்கையை விட முடியாது; வீட்டை விடுகிறேன்" என்று கூறி ஜீவா வீட்டை விட்டு வெளியேறினார். வைதீக கோட்டையான வைக்கம் என்ற ஊரில் தீண்டாமை ஒழிப்பு சத்தியாகிரகத்தில் ஈடுபட்டார்; அடிபட்டார்; வேறு பல அடக்குமுறைகளுக்கும் ஆளானார். அங்கிருந்து திரும்பிய ஜீவா நாகர்கோவிலுக்கு 5 மைல் தூரத்தில் உள்ள சுசீந்திரத்திலும் அத்தகைய போராட்டத்தில் கலந்து கொண்டார் என்று குறிப்பிடுகிறது. இஸ்மாத் பாஷா எழுதிய வாழ்க்கை வரலாறு நூல் ஜீவாவின் வாழ்நாள் காலத்திலேயே வெளியிடப்பட்டது.

ஜீவா இறுதி நாட்களில் உடன் பணியாற்றிய கே.பாலதண்டாயுதம் அவர்கள் ஜீவா இறந்த ஓரிரு ஆண்டுகளில் வாழ்க்கை வரலாற்றினை எழுதுகிறார். இருவரின் வாழ்க்கை வரலாறுகளும் நேரடியாக ஜீவாவிடம் இருந்து பெற்ற செய்திகளாகத்தான் இருக்க முடியும். இதில் ஏன் முரண்பாடுகள் வருகின்றன, ஜீவாவே தவறாக சொன்னாரா (அ) தங்கள் தோழருக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று துடிப்பில் இவர்களாக இந்தப் பகுதிகளை எழுதியிருப்பார்களா? என்பதே நாம் எழுப்பும் கேள்வி.

**தொடரும்..**

# மாற்றியமைக்கப்படும் கடவுள்கள்

## கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை-21

பழையனவற்றிலிருந்து புதிய சடங்குகள் மட்டும் உருவமைக்கப்படுவதில்லை; ஆண்-பெண் கடவுளர்களும் புதிய வடிவத்தை அடைகின்றனர். அண்மைக்காலம் வரை சாதாரண மக்களோடு தொடர்புடைய கடவுளர்களும் தேவியர்களும் இப்போது பெருவணிக வளாகங்களும், பல்திரையரங்குகளும் (மால்களிலும் மட்டிபிளக்ஸுகளும்) கொண்ட ஆரவாரப் பகட்டுள்ள புதிய நகர்ப்புறங்களில் இருப்பிடம் பெறுகிறார்கள். நாட்டின் தென் பகுதியில், ஒருகாலத்தில் மக்களின் ஆரோக்கியத்தையும் மண்ணின் வளத்தையும் பாதுகாத்துவந்த கிராம தெய்வங்கள் அல்லது அம்மன்கள், இப்போது நடுத்தர வகுப்பினரால் ஏற்கப்படுகின்றனர். இப்போக்கு, 'கடவுளரின் தரம் உயர்த்துதல்' எனப்படுகிறது. நாட்டின் வடக்குப் பகுதியில், 'மாதா'க்களின் கோயில்கள் அல்லது சக்திபீடங்களுக்குச் செல்லும் (சதி என்ற தேவியின் உடலுறுப்புகள் பலவும் விழுந்ததாகக் கருதப்படுகின்ற இடங்கள்) புனித யாத்திரைகள் மிகவும் பெருகியுள்ளன.

சென்னை மாநகரத்தின் சாலையோரக் கோயில்கள் பற்றி அண்மையில் யு. கல்பகம் என்பவர் செய்த ஆய்வு, மாரியம்மனின் தரம் உயர்த்துதல் பற்றிய இயங்கு முறையைத் தெரிவிக்கிறது. தென் சென்னையின் மயிலாப்பூர் - மந்தை வெளிப் பகுதியில் உள்ள சாலையோரக் கோயிலான ஸ்ரிநாக கன்னியம்மன் கோயிலின் வரலாற்றை இங்கு உதாரணமாகத் தரலாம். ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு முன்பு, கன்னியம்மா என்ற பெயர்கொண்ட பூக்காரி, மக்களால் புனிதமானதாகக் கருதப்படுகின்ற ஓர் அரசமரத்தடியில் ஒரு கல்லை நட்டு, பெண் கடவுளின் ஒரு சிறிய சன்னதியை உருவாக்கினார். ஆண்டுகள் செல்ல, இந்தக் கல், பழங்குடி, தலித் கடவுளர் மற்றும் வேதக் கடவுளர்களின் கலவையாக ஒரு பலகோயில் வளாகமாக வளர்ந்துவிட்டது.

சென்னை புகழ்பெற்ற கோலவிழியம்மன் கோயிலைப் புதுப்பித்துக் கட்டி, புனிதப்படுத்தி, பார்ப்பனப் புரோகிதர்களை வைத்து வேதச் சடங்குகளைக் கொண்டு மீண்டும் கும்பாபிஷேகம் நடத்தியதை ஆய்வாளர் ஜோன்வேகார்ன் விவரிக்கின்றார். இங்கும் 'ஒரு புனித மரத்தடியில் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னால், பழைய முண்டகக் கண்ணியம்மன் எளிய ஒரு கல்வடிவத்தில் அமர்ந்திருந்தாள்' எனப்படுகிறது. இப்போது 'அவளுடைய முகமும் முக்கோண உடலும் தடித்த வெள்ளித்தகட்டால் மூடப்பட்டுள்ளன. அவளுடைய மரமும் கீற்றுக்குடிசையும் பளிச்சென வண்ணம் பூசிய மண்டபம், பிரகாரம் அமைத்து இரு கோபுரங்கள் ஆகியவற்றுடன் வளர்ந்துள்ளன.' இந்த தேவதை, கிராமப்புற நிலங்களின் வளத்தைப் பாதுகாத்து வந்தவள். புதிய பகட்டான நகர்ப்புறத்திற்கு நகர்ந்திருக்கிறாள்.

சென்னைக்கு அருகிலுள்ள மேல்மருவத்தூரில் மிக வேகமாக வளர்ந்துவரும் ஆதி பராசக்தி வழிபாடு, மேல்நோக்கிச் செல்லும் கிராம தேவதைக்கு மற்றுமொரு சான்று. இதை நன்கறியப்பட்ட சமகால இந்துமத ஆய்வாளரான வசுதா நாராயணன் விரிவாகக் கூறியுள்ளார். " இந்தக் கோயில் வளாகத்திற்கு, பத்தாயிரக்கணக்கிலான பக்தர்கள் சிவப்பு உடை அணிந்து வருகிறார்கள். இந்தக் கோயிலின் ஆண் தெய்வ வாக்குரைஞரான பங்காரு அடிகளாரின் உடலில் அம்மன் அவதாரம் குடிகொண்டு பேசுவதாக அவர்கள் நம்புகிறார்கள். அவரை 'தாய்' அல்லது 'அம்மா' என்றும் அழைக்கிறார்கள். அவளுடைய அவதாரம் தெய்வ வாக்குரைஞரின் வாயிலாக சாதி, சுற்றுச்சூழல், உலக அமைதி ஆகிய சமகாலப் பிரச்சினைகளைப் பற்றியும் அம்மன் பேசுகிறது. பக்தைகளே அதன் ஆன்மிகக் குழுக்கள், சங்கங்கள் பலவற்றை நடத்துகின்றனர். மாதவிலக்குப் பெண்கள், விதவைகள் போன்றோர் மீதான தீட்டு அனுசரிக்கப்படுவதில்லை. சிவப்பு உடையை எல்லா பக்தர்களும் அணிந்துவருவதால் (சிவப்பு என்பது மனித இனத்திற்கே பொதுவான இரத்தத்தின் நிறம்) சாதி வித்தியாசங்கள் பார்க்கப்படுவதில்லை.

> **சர்வ சக்தி கொண்டதாக கூறப்படும் பல கடவுள்கள் இப்போது பார்ப்பனியத்தின் கரங்களில் விளையாட்டுப் பொம்மைகளாக ஆக்கப்பட்டுவிட்டனர். நடுத்தர மக்களை ஈர்க்க அனுமனையும், அம்மனையும் பிரபலமாக்கி பார்ப்பனியக் கடவுகளின் தூதுவர்களாக மாற்றிவிட்டார்கள் கடவுளுக்கு கற்பிக்கப்பட்ட குணங்கள், வழிபாட்டு சடங்குகள் மாற்றப்பட்டுவிட்டன.**

ஒருகாலத்தில் அம்மைநோயைத் தீர்ப்பவளாகக் கருதப்பட்ட மாரியம்மன், கர்நாடகாவில் இப்போது எய்ட்ஸ் அம்மனாக மீள் கட்டமைப்பு செய்யப்பட்டிருக்கிறாள். இவர் எய்ட்ஸை குணப்படுத்தும் தாய். இந்தப் புதிய தேவதை, எச்.என். கிரீஷ் என்ற உயர்நிலைப் பள்ளி அறிவியல் ஆசிரியரின் கண்டுபிடிப்பு. எச்ஐவி -எய்ட்ஸின் காரணங்களையும் எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கைகளையும் மக்களுக்குக் கற்பிக்க ஒருவேளை இப்படிச் செய்திருக்கலாம். (ஒரு பெண் தெய்வத்துக்கும் எச்ஐவி வைரஸுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்ற கேள்வியை எவரும் கேட்கவில்லை!) மதச்சார்பற்ற நோக்கங்களுக்கு மத நம்பிக்கைகளைப் பயன்படுத்தினால்தான் கடவுளைக் காப்பாற்ற முடியும் என்று என்பதற்காகவே இந்த மாற்றங்கள் **கடவுள் சக்தி என்று ஒன்று இருந்தால் கடவுள்களை இப்படி மாற்றிக் கொள்ளமுடியுமா?**

எய்ட்ஸ் அம்மன் ஓர் எளிய விஷயம், மிக அதிகமான பேரை அது ஈர்ப்பதாகவும் தெரியவில்லை. ஆனால் தரம் உயர்த்தும் திட்டங்கள் பல, உண்மையிலேயே பிரமிக்கத்தக்க அளவில் நிகழ்த்தப்படுகின்றன, அவற்றுக்குப் பெரிய வணிகர்களிடமிருந்து மிகப் பெரிய கொடைகள் தேவைப்படுகின்றன. சுட்டிக்காட்டக் கூடிய ஓர்உதாரணம், புதுக்கோட்டையில் டிவிஎஸ் மோட்டார்ஸின் நன்கொடையால் தரம் உயர்த்தப்பட்ட மாரியம்மன் கோயில். தமிழ்நாட்டில் முக்கியமான பெரிய கோயில் புதுப்பித்தல்களை மேற்கொண்டுள்ள இந்தியக் கலாச்சார, பாரம்பரிய அறக்கட்டளைக்கு (இண்டியன் கல்ச்சுரல் அண்ட் ஹெரிடேஜ் ட்ரஸ்ட்) முக்கிய கொடையாளர் டிவிஎஸ் குழுமம் ஆகும். டிவிஎஸ் குடும்பம், அய்யங்கார் பார்ப்பனர்கள் அறிவியல் மற்றும் பகுத்தறிவுக்கு எதிராக தங்களின் பார்ப்பனியத்தை மீட்க துடிப்பவர்கள்.

இதே போல் அனுமன் கோயில்கள் கட்டுவதிலும் புதுப்பிப்பதிலும் ஏற்பட்டுள்ள பெருக்கமும், நடுத்தர வர்க்கத்தினரின் ஆதரவைக் பெருவதற்காகவே செய்யப்படுகிறது. 'அனுமனுடைய தலைவனுக்கு (இராமனுக்கு) உள்ள கோயில்களைவிட அனுமனுக்கு உள்ள கோயில்கள் அதிகம்' என்று ஆய்வுகள் கூறுகின்றன." அனுமன் பரவலாகப் புகழ் அடைந்திருப்பது மட்டுமல்ல, போட்டி போட்டு பெரிய அளவில் அனுமனின் சிலைகளை வைப்பது பரவலாகி வருகிறது. ஆந்திராவில் புட்டபர்த்தியில் சாயிபாபா ஆசிரமத்திலுள்ள 70 அடி உயர அனுமன் சிலை பிரபலமானது. தில்லியில் அதைவிட் உயரமாக புதிதாக 91 அடி, 108 அடி அனுமன் சிலைகளை நிறுவிய பிறகு சாயிபாபாவின் அனுமன் குள்ளமாகிவிட்டார்.

**கடவுளின் குணங்களும் மாற்றியமைக்கப்படுகின்றன.** புதுதில்லியின் மேட்டுக்குடி நகர் பகுதியான கனாட் பிளேஸில் உள்ள அனுமன் கோயில் கூட்டம் அலை மோதுகிறது. கடவுள் காலத்தின் அருமையை மனத்தில் புரிந்துகொண்டு வழிபாட்டு சேவைகளும் மாற்றி அமைக்கப்படுகின்றன. கனாட் பிளேஸில் உள்ள அனுமன் கோயில், ஓரிட-முழுச்சேவைக் (ஒன்-ஸ்டாப் ஃபுல் சர்வீஸ்) கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. அங்கேயே பக்தர்கள் துர்கா, லக்ஷ்மி, சந்தோஷ் மாதா, விநாயகரையும் ஒன்றாக இணைத்துவிட்டனர். ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு குணாம்சம் கற்பிக்கப்படுகிறது. அனுமன் பிரம்மச்சாரி என்றும், உடல் வலிமை மிக்கவன் என்றும் ஆண்களின் கடவுளாகச் சித்தரிக்கப்பட்டான். இப்போது, அவன் பெண்களின் கடவுளாகவும் மாற்றப்பட்டுள்ளான். ஆண் குழந்தை பிறப்பதற்கும், குடும்பத்தில் செல்வம் வளர்வதற்கும் அனுமன் உதவுவான் என்று கற்பிக்கப்பட்டு பெண்களையும் நம்ப செய்து விட்டனர்.

**மதத்தை உயிர்ப்புடன் நிலைத்திருக்க கடவுள்களை கச்சா பொருளாகவே பயன்படுத்துகிறது பார்ப்பனியம்.** எனவே தேவலோகத்தில் வாழும் பெரிய கடவுள்களைவிட, சாதாரண மக்களின் தேவைகள், விருப்பங்களை உள்ளூர் கடவுள்தான் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை வளர்க்கப்படுகிறது. விஷ்ணுவும் சிவனும் உடனடியாக செயல்படமாட்டார்கள் என்றும் உள்ளூர் கடவுள்களும் அம்மனும், அனுமானும் தூதுவர்களாக செயல்பட்டு கோரிக்கைகளை பெரும் தெய்வங்களுடன் கொண்டு சேர்ப்பார்கள் என்று நடுத்தர மக்கள் நம்ப வைக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்டோபர் புல்லர் என்ற ஆய்வாளர் தனது ஆய்வில் இதை சுட்டிக்காட்டுகிறார்.

மதச்சார்பின்மைக் கோட்பாடு, இந்துக்கள் தங்கள் கடவுளர்க்குப் பணிஓய்வு வழங்குவார்கள் என்று எதிர்பார்த்தது. இதற்கு மாறாக, நவீனமயமாகும்போது, இந்துக்கள் தங்கள் கடவுளர்களையும் மறுவுருவாக்கம் செய்கிறார்கள். அதற்கு மாறாக பார்ப்பனியம் கடவுள்களை மறு உருவாக்கம் செய்து மக்களிடம் நிலைக்க செய்து வருகிறது.

*ஆதாரம்: மீரா நந்தா எழுதிய "God Market" நூல்.*

*தொடர் நிறைவடைகிறது...*

# கழக ஏட்டுக்கு நன்கொடை

பெரியார் வளர்ச்சிக் குழு உறுப்பினர்கள் 37 பேர் இணைந்து வாட்ஸ்அப் குழு வழியாக புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு மாதம் தலா ரூ. 500 என நன்கொடை திரட்டி வருகின்றனர். ஓராண்டு செயல்திட்டமாக இதை செயல்படுத்தி வருகின்றனர். அக்டோபர் மாத நன்கொடையாக ரூ.18,300 வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆசிரியர்).

# வாசகர் கடிதம்

பெரியார்: ஜாதி, தேசியம், சோசலிசம் (Periyar - Caste, Nation & Socialism) ஆங்கில நூல் குறித்த அறிமுகம் சிறப்பாக இருந்தது. பெரியாரியல்வாதி தோழர் எஸ்.வி.ராஜதுரை எழுதியுள்ள இந்நூல், வெளியீட்டில் இருந்து தொடர்ச்சியாக இந்நூல் குறித்த விவாதத்தை திராவிடர் விடுதலைக் கழகம் முன்னெடுப்பது இந்நூல் இன்னும் பலரைச் சென்றடைய உதவும். பெரியார் குறித்த அவதூறுகளை மறுத்து ஏற்கெனவே கழகத் தலைவரும், கழகப் பொதுச்செயலாளரும் நூல்கள் எழுதியுள்ள நிலையில் அதே பாணியிலான ஆங்கில நூல் வெளிவருவது வரவேற்கத்தக்கது.

திராவிடர் விடுதலைக் கழகம் பயிலரங்கத்தில் தோழர் ஜீவா குறித்து கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு கழகத் தலைவர் அளித்த பதில் சமூக வலைதளங்களில் விவாதப் பொருளானது. அதையொட்டி ஆரோக்கியமான விவாதத்தை தலைவர் தொடங்கவிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதன் மூலம் இன்றைய தலைமுறை பல்வேறு வரலாற்று தகவல்களையும் தரவுகளையும் அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறோம்.

**-அருண்கோமதி (தாம்பரம் பகுதி அமைப்பாளர்)**

# அமெரிக்க ஜாதி எதிர்ப்பு பெண் போராளிக்கு வைக்கம் விருது



2025ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் வைக்கம் விருது! கலிபோர்னியாவைச் சேர்ந்த தேன்மொழி சவுந்தரராஜனுக்கு அறிவிப்பு! ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப்பாடுபட்டு, மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசால் வைக்கம் விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டு அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த தேன்மொழி சவுந்தரராஜனுக்கு விருது அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேன்மொழி சவுந்தரராஜனுடைய பெற்றோர் தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அமெரிக்காவில் வசித்து வரும் தேன்மொழி சவுந்தரராஜன், இந்திய அமெரிக்க ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமை ஆர்வலர் மற்றும் எழுத்தாளர் ஆவார். கட்டமைப்பு ஜாதியத்தால் ஓரங்கட்டப்பட்டவர்களின் உரிமைகளுக்காக அவர் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகிறார். அமெரிக்காவிலும், உலக அளவிலும் ஜாதியால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் சிவில் உரிமைகள் அமைப்பான ' ஈக்வாலிட்டி லேப்ஸின்' (Equality Lab) நிறுவனர் / நிர்வாக இயக்குநர் ஆவார். தலித் பெண் பார்வையில் ஜாதிய ஒடுக்குமுறை குறித்து ஆய்வு நூலை எழுதியவர். வைக்கம் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தேன்மொழி சவுந்தரராஜன் அவர்களுக்கு அய்ந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தங்க முலாம் பூசிய பதக்கம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்" என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சிவகிரியில் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

ஈரோடு தெற்கு மாவட்ட கழகம் சார்பில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் சிவகிரி பேரூராட்சி, அண்ணா கலையரங்கத்தில் 11.10..2025 சனிக்கிழமை அன்று மாலை 5:30 மணி அளவில் கழக ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் சி. செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது.



கழக மாநில அமைப்புச் செயலாளர் ப. ரத்தினசாமி, ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எழிலன், முன்னாள் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர்செ. சசிகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகச் செயல்பாட்டாளர் ஈரோடு நல்லதம்பி வரவேற்புரையாற்றினார்.

சிவகிரி பேரூராட்சித் தலைவர் பிரதீபா கோபிநாத், சிவகிரி தி. மு. க 10 வார்டு செயலாளர் தண்டாம்பாளையம் தா. கு. அன்பரசு, சமூக நீதி மக்கள் கட்சித் தலைவர் வடிவேல்ராமன், ஆதித்தமிழர் பேரவை மாநில நிதிச் செயலாளர் பெருமாவளவன், மதிமுக ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் மு. கோபால், திகஒன்றிய பொறுப்பாளர் சிவகிரி சண்முகம், திராவிடர் எழுச்சிப் பேரவைத் தலைவர் சக்திவேந்தன், தமிழ்ப் புலிகள் கட்சி ஈரோடு மாவட்டச் செயலாளர் மாரிமுத்து, சிவகிரி அன்பெழில் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

புதிய திராவிட கழக நிறுவனத் தலைவர் ராஜ்கவுண்டர் அவர்கள் உரையாற்றும்போது ராஜ் கவுண்டர் என்ற என் பெயருக்கு பின்னால் இருக்கும் கவுண்டர் என்ற ஜாதி பெயரை வருங்காலங்களில் எடுத்து விடுகிறேன் என்று கூறி உரையாற்றினார்.

திமுக மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் ஈரோடு வீரமணி"பெண்கள் போற்றும் திராவிட மாடல்" என்ற தலைப்பில் பெரியார், அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் பெண்களுக்காக செய்த சமூகநீதி திட்டங்கள் பற்றியும், திராவிட மாடல் ஆட்சியில் முதலமைச்சர் ஸ்டாலின் பெண்கள் முன்னேற்றத்திற்காக செய்து கொண்டிருக்கும் நலத்திட்ட நன்மைகளையும் பற்றி கருத்துரையாற்றினார்.

திமுக ஈரோடு மாவட்ட இலக்கிய அணி தலைவர் கு. இளஞ்செழியன் மூடத்தனத்தை அழித்தொழித்து இளைஞர்கள் சுயமரியாதையோடு வாழ்ந்து சமத்துவம், சமூகநீதிக்காக போராட முன் வரவேண்டும் என்றும், இளைஞர்கள் பகுத்தறிவு சிந்தனைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்றுக் கூறி கருத்துரையாற்றினார்.

*U2 BRUTUS* மைனர் "ஆரிய மாயை" என்ற தலைப்பில் பார்ப்பன ஆதிக்கம், பார்ப்பன சுரண்டல் ஆகிய நம் மக்களுக்கு எதிராக இருக்கும் ஆரிய மாயயை தோலுரித்து நகைச்சுவையாக பல கருத்துக்களை முன் வைத்து கருத்துரையாற்றினார்.

பேரலை இந்திரக்குமார் தேரடி "இலட்சிய வரலாறு" என்ற தலைப்பில் நம் இழிவு நீக்கம், நம் முன்னேற்றத் தடைநீக்கம், ஆரிய மூடநம்பிக்கையில் இருந்து விடுபடுதல், பகுத்தறிவாளர்களாக, மானமுள்ள சமுதாயமாக்குவது, நமக்காக நம் வரலாற்று தலைவர்கள் உருவாக்கியதைப் போல் இனி வரும் காலங்களில் நாம் இலட்சிய வரலாற்றை உருவாக்க வேண்டும் என்று கூறி கருத்துரையாற்றினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுயமரியாதை இயக்க நூற்றாண்டு பற்றியும், நம்முடைய தொடக்க கால தலைவர்கள், நமக்கு முன்னோடியாக இருந்து பணியாற்றியவர்கள் என்ன உற்சாகத்தோடும், உறுதியாக இருந்தார்களோ அதை நாம் கொஞ்சமாவது முன்னெடுத்து செல்ல வேண்டும் என்றும் அல்லது போராட்டம், குரல் கொடுப்பவர்களுடன் போரட்ட க் களத்தில் நிற்க வேண்டும் அல்லது அந்த போராட்டத்தை பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என வேண்டுகோளாக முன்வைத்து சிறப்புறையாற்றினார்.

ஈரோடு தெற்கு மாவட்டத் தலைவர் எழிலன் நன்றியுரையாற்றினார். கழகத் தோழர்கள், ஆதித் தமிழர் பேரவையினர், தமிழ்ப் புலிகள் கட்சியினர், திமுக, கம்யூனிஸ்ட் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மதுரையில் ஜாதி எதிர்ப்பு கருத்தரங்கம்

ஜாதிய - வளர்க்க ஆணவப் படுகொலைகள் எதிர்ப்பு,பெண்களின் காதல் திருமணத் தேர்வு உரிமை, காதலர் உயிர் காக்க சட்டம், சமூகப் பாதுகாப்பும் என்ற தலைப்பில் சமத்துவக் கருத்தரங்கம் 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் கிராமசுப்பு அரங்கம்(கவின் - சதீஷ்குமார் நினைவு அரங்கத்தில்) மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.



ஜாதி ஒழிப்பு முன்னணி மதுரை மாவட்டச் செயலாளர் சீ.கா. தெய்வம்மாள் தலைமையில் நடைபெற்றது. தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகம் மதுரை மாவட்டச் அமைப்பாளர் கொ. மனோகரன் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு பெண்கள் இயக்கத் தலைவர் தொ. ஆரோக்கிய மேரி நோக்க உரையாற்றினார்.

ஐந்திணை மக்கள் கட்சித் தலைவர் தேவதாசு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாலின், தமிழ் புலிகள் கட்சியை முத்துக்குமார், மக்கள் தேசம் கட்சியைச் குரு விஜயன், திராவிடத் தமிழர் கட்சி விடுதலை வீரன், ஆதித்தமிழர் பேரவைச் கார்த்திக்,நீதிவேந்தன், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவை காமேஸ்வரி, மக்கள் பாதை பேரியக்கம் நா. அமுதா, தலித் விடுதலை இயக்கம் பீமாராவ் ஆகிய தோழர்கள் வாழ்த்துரையாற்றினார்கள்.

இட ஒதுக்கீடு, சிறப்புச் சட்டத்தின் அவசியம் என்ற தலைப்பில் வழக்கறிஞர். ப.பா. மோகன் மற்றும் ஜாதி,சனாதனம் மறுப்போம் - சமத்துவ சனநாயகம் காப்போம் என்ற தலைப்பில் தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகத் தலைவர் மீ. தா. பாண்டியன் ஆகியோர் தமிழ்நாட்டில் நடந்த ஜாதி ஆணவப் படுகொலைகளை பற்றியும் ஜாதி ஆணவப் படுகொலைக்கு எதிராக தமிழ்நாடு அரசு சட்டத்தை இயற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கருத்துரையாற்றினர்.

நிறைவாக பெண்களின் காதல் கணவன் தேர்வுரிமை பறிப்பும் - ஜாதியும் என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழ்நாட்டில் நடந்த பல்வேறு ஆணவக் கொலைகளை பற்றியும், தமிழ்நாடு அரசு சட்டசபையில் ஜாதி ஆணவப் படுகொலைக்கு எதிராக தனிச்சட்டத்தை பற்றி விவாதம் நடத்தி தனிச் சட்டம் இயற்ற வேண்டும், உயர்வு தாழ்வு மனப்பான்மையை மக்களிடம் இருந்து போக்கவும் ஜாதிக்கு எதிராக சமூக அமைப்புகள் பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என்ற் நிறைவுரையாற்றினார்.

தமிழக மக்கள் பண்பாட்டுக் கழகம் மாவட்டக் குழு மு. தங்கப்பாண்டியன் நன்றி உரையாற்றினார். இதில் கழகத் தோழர்கள் மதுரை மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, மேலூர் பகுதிப் பொருப்பாளர் சத்தியமூர்த்தி, அழகர், முருகேசன், வாசுகி ஆகிய தோழர்களும் தோழமை அமைப்பு ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

## தந்தை பெரியார் தொழிற்சங்கம் திறப்பு

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், தந்தை பெரியார் தொழிற்சங்க பேரவையின் கிளை திறப்பு விழா ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத் தொழிலாளர்கள் சார்பாக தந்தை பெரியார் தொழிற்சங்கம் திறப்பு விழா 23.10.2025 அன்று நடைபெற்றது. சி.குப்புசாமி (பொதுச் செயலாளர் தந்தை பெரியார் தொழிற்சங்க, பேரவை) தலைமையில் கோ. செல்லதுரை (அந்தியூர் கிளை தலைவர்) வரவேற்புரையாற்றினார்.



காவை ஈஸ்வரன் (தலைமைக் குழு உறுப்பினர்), நாத்திக ஜோதி (ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர்), ஈஸ்வரன் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் விசிக, வேங்கை பொன்னுச்சாமி தமிழ்ப் புலிகள் கட்சி ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் ஆகியோர் தொழிற்சங்கத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள். கௌசல்யா அந்தியூர், பெருமாள் அந்தியூர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். கழகத்தின் சார்பாக வேணுகோபால் பவானி, சேகர் வெள்ளி திருப்பூர், குமரேசன் கொளத்தூர் ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியாரிய உணர்வாளர்கள், தோழமை இயக்கத் தோழர்கள் என 35க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தூத்துக்குடியில் ஜாதி எதிர்ப்பு பொதுக்கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட க் கழகம் சார்பில் தூத்துக்குடி வடக்கு சோட்டையன் தோப்பு தருவை குளம் முதன்மை சாலையில் 23.09.2025 அன்று மாலை 05.30 மணியளவில் தந்தை பெரியாரின் 147 வது பிறந்தநாளை முன்னிட்டு "மனிதம் நமது அடையாளம் - ஜாதி நமக்கு அவமானம் " எனும் தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்டக் கழகப் பொருளாளர் கே. சந்திரசேகர் தலைமை வகித்தார். வடக்கு சோட்டையன் தோப்பு ச.கா.பால சுப்பிரமணியன், ஆழ்வை ஒன்றிய கழகச் செயலாளர் ஆழ்வை இரா.உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ச.ரவிசங்கர் வரவேற்புரையாற்றினார்.

நெல்லை மாவட்டத் தலைவர் பா.பால்வண்ணன், தென்காசி மாவட்ட தலைவர் குறும்பை அரு.மாசிலாமணி, தென்காசி செந்தமிழ், பாலசுப்பிரமணியன், மனித நேய மக்கள் முன்னேற்றக் கழக மாவட்டத் தலைவர் செய்யது சம்சுதீன், சமம் குடிமக்கள் இயக்க மாவட்டப் பொறுப்பாளர் ஜாண்.பி.ராயர், வி.சி.க. மகேஷ், தி.மு.க. ஒட்டப்பிடாரம் ஒன்றிய இளைஞர் அணி துணைச் செயலாளர், இளம்பேச்சாளர் இள.கார்த்திக், மனித நேய மக்கள் முன்னேற்ற கழக மாநில பொதுச் செயலாளர் முகமது ஜான், தமிழர் முன்னேற்ற கழக நிறுவனத் தலைவர் அர்ச்சுணன், வி. சி.க. வழக்குரைஞர் அணி பொறுப்பாளர் செந். அர்ஜூன், மனித நேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் கா.மை. அகமது இக்பால், கிருத்துவ வாழ்வுரிமை இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் பணி சுந்தரிமைந்தன், வி.சி.க. முன்னாள் மண்டலச் செயலாளர் சொ.சு. தமிழினியன் ஆகியோர் உரையாற்றினர்.



நிறைவாக கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் பேசுகையில் "ஜாதியை குடி அடையாளம், குடிப் பெருமை என பேசி வருகிறார்கள். குடிதான் தமிழகளின் அடையாளம் என தமிழ்த் தேசியம் எனும் பெயரில் சனாதனவாதிகளிடம் மண்டியிடும் தமிழ்த் தேசியர்கள் பேசி வருகிறார்கள். ஜாதி இழிவானது, அவமானகரமானது என திராவிடர் இயக்கம் ஒரு நூற்றாண்டு போராடி ஜாதிச் சங்கத் தலைவர்களே தங்கள் பெயருக்குப் பின்னால் ஜாதியை போடுவதை அவமானமாக கருதும் இவ்வேளையில், ஜாதியை பெருமை என தற்போது சில அறிவிளிகள் தன் பெயருக்குப் பின்னால் ஜாதியை போடத் தொடங்கியுள்ளனர்.

ஆண்கள் தங்கள் பெயருக்கு பின்னால் ஜாதிப் பெயர் போடத் தயங்கும் போது, (HCL) நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான ரோகிணி தன்னை ரோகிணி நாடார் என போட்டுக்கொள்கிற அளவிற்கு மீண்டும் சனாதனம் தலைதூக்குகிறது. இழிவை இழிவு என்று கூட அறிவது தமிழர்கள் சிலர் ஜாதி பட்டம் போட்டுக்கொள்கிறார்கள். குடிப் பெருமையின் வீரம் தான் ஜாதி பெண்ணை இன்னொரு ஜாதி ஆண் திருமணம் செய்தால் அல்லது காதலித்தால் ஆணயோ பெண்ணையோ கொலை செய்வதில் தான் தான் இருக்கிறது என கொலை செய்கிறார்கள். அந்த கொலைகாரர்களை வீரர்களாக தமிழ் தேசியம் பேசும் தலைவர்கள் பாராட்டுவதும் மனித குலத்திற்கு அவமானம். இங்கொன்றும் அங்கொன்றும் என நடைபெறும் ஜாதியக் கொடுமை, தமிழர் மற்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக அமையும் .

கல்வியால் நாம் பெற்ற முன்னேற்றம் இந்த ஜாதிப் பெருமையால் கொலைக் கைதியாக்க பயன்பெறுமே தவிர அறிவியலில் ஆற்றலில் வளர்ச்சி பெற முடியாமல் போகும். நமக்கு மனிதமே அடையாளம்; ஜாதி அவமானம் என தமிழர்கள் உணர வேண்டும் ” என்று சிறப்புரையாற்றினார். சா.த பிரபாகரன் நன்றி கூறினார். நிகழ்வில் மனித நேய மக்கள் முன்னேற்றக்கழகம், விசிக, மனித நேய மக்கள் கட்சி மற்றும் கழகத் தோழர்கள் தோழமை அமைப்புத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். அப்பகுதியை சார்ந்த பாலன் தானாக முன் வந்து நிகழ்விடத்தை சுத்தம் செய்து தந்ததோடு, அடுக்கு மாடி குடியிருப்பு மக்களை பொதுக்கூட்டம் கேட்கவும் ஏற்பாடு செய்து தந்தார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : October 31, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran